செ.வெ. எண் 228/2018 தேதி: 17/4/2018

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வேலூர் பிரிவு.

செய்திக் குறிப்பு.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் 2014–2015–ம் ஆண்டு சட்டப் பேரவையில் விதி எண்.110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பைத் தொடர்ந்து, சமுதாய வளர்ச்சிக்கு சேவையாற்றும் இளைஞர்களது பணியை அங்கீகரிக்கும் பொருட்டு 2015–ம் ஆண்டு முதல் "முதலமைச்சர் மாநில இளைஞர் விருது " ஒவ்வொரு ஆண்டும் சுதந்திர தினத்தன்று 15 வயது முதல் 35 வயது வரை உள்ள 3 ஆண்கள் மற்றும் 3 பெண்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. இந்த விருது ரூ.50,000/– ரொக்கம், பாராட்டுப் பத்திரம் மற்றும் பதக்கம் ஆகியவைகளை உள்ளடக்கியதாகும்.

ஆதன்படி, 2018–ம் ஆண்டுக்கு முதலமைச்சர் மாநில இளைஞர் விருது எதிர்வரும் 15.08.2018 அன்று நடைபெறும் சுதந்திர தின விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருது தொடர்பாக கீழ்க்காணும் தகுதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. 15 வயது முதல் 35 வயது வரையுள்ள ஆண்கள்/பெண்கள் ஆகியோர் விண்ணப்பிக்கலாம். கடந்த ஏப்ரல் 1, 2017 அன்று 15 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும் மற்றும் மார்ச் 31, 2018 அன்று 35 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

2. கடந்த நிதியாண்டில் (2017–2018) மேற்கொள்ளப்பட்ட சேவைகள் மட்டுமே பரிசீலிக்கப்படும்.

3. விருதிற்கு விண்ணப்பிக்கும் முன்பு குறைந்த பட்சம் 5 வருடங்கள் தமிழகத்தில் குடியிருந்தவராக இருத்தல் வேண்டும் (சான்று இணைக்கப்பட வேண்டும்)

4. விண்ணப்பதாரர்கள் சமுதாய நலனுக்காக தன்னார்வத்துடன் தொண்டாற்றியிருக்க வேண்டும். அவ்வாறு அவர்கள் செய்த தொண்டு, கண்டறியப்படக் கூடியதாகவும் அளவிடக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

5. மத்திய / மாநில அரசுகள், பொதுத்துறை நிறுவனங்கள் / பல்கலைக்கழகங்கள் / கல்லூரிகள் / பள்ளிகளில் பணியாற்றுபவர்கள் இவ்விருதிற்கு விண்ணப்பிக்க இயலாது.

6. விண்ணப்பதாரருக்கு உள்ளூர் மக்களிடம் உள்ள செல்வாக்கு விருதிற்கான பரிசீலனையில் கணக்கிற்கொள்ளப்படும்.

விண்ணப்பப் படிவம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளம் www.sdat.tn.gov.in –லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் 30.04.2018 மாலை 5.00 மணிக்குள் கீழ்க்கண்ட முகவரியில் நேரில் அளிக்கப்பட வேண்டும்.

மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர்,<br>
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,<br>
நேதாஜி விளையாட்டு அரங்கம்,<br>
வேலூர்.

செ.ம.மக்கள்.தொ.அ.<br>
வேலூர்– 9.